## <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 6/2025** **Date:23.01.2026.**

**(PW1)- கே. ஐயப்பன்**

<u>**1** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சுனைப்பாரி ஊரில் நான் எதேனும் பொறுப்பில் உள்ளனா என்றால் ஊரில் எந்த பொறுப்பும் கிடையாது. நான் வழக்கில் ஊரின் தலைவர் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய ஊர் மக்கள் எனக்கு அதிகாரம் அளித்ததை காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துளளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை எந்த நோக்கத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ராமாசாமி என்பவர்ரான 3 ம் பிரதிவாதி இடத்தில் டவர் அமைக்ககூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எந்த சர்வே எண்னில் அமைந்துள்து என்றால் கல்குளம் கிரமாம் 310/ஏ 1, பி1, ஏஏ ஆகிய சர்வே எண்களில் அமைந்துள்ளது. மேற்படி சர்வே எண்னின் விஸ்திரணம் என்னவென்றால் 19 செண்ட் ஆகும்.

2. மேற்படி 19 செண்ட் அரசாங்கத்திற்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்டது ஆகும். தாவா சொத்து சுனைப்பாறை ஊர் எல்கையை தாண்டி உள்ளது என்றால் சரியல்ல, தாவா சொத்து ராஜராஜேசுவரி அம்மன் கோவில் அருகே அமைந்துள்ளது. மேற்படி கோவிலை ஒட்டி சர்ச்சு அமைந்துள்ளது என்றால் 10 மீட்டர் தூரம் தள்ளி அமைந்துள்ளது. தாவா சொத்தின் சுற்றி எத்தனை குடும்பங்கள் உள்ளது என்றால் சுமார் 50 குடும்பங்கள் உள்ளது. தாவா சொத்தில் டவர் அமைக்கும் விபரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் தாவா இடத்தில் அளவீடு செய்ய வந்த நபர்கள் கூறினார்கள். தாவா இடத்தில் டவர் அமைக்கப்படும் விபரம் எனக்கு ஆவணத்தின் அடிப்படையில் தெரியாது என்பதால் சரிதான்.

3. தாவா இடத்தில் டவர் அமைக்க கூடாது என்று யாரிடமாவாது புகார் கொடுத்தேனா என்றால் இரணியல் காவல் நிலையத்தில், மாவட்ட ஆட்சியருக்கு, ஜீயோ டவர் நிறுவனத்திற்கும் புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகாரின் நகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த புகார் மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிகிறேன் என்றாலும் சரியல்ல. மக்களின் நலனுக்காக தான் எனது ஊரில் டவர் அமைக்கப்படுகிறது என்றால் சரியல்ல. தற்போது உலகமே கைபேசியில் தான் இயங்கி கொண்டு இருகிறது என்றாலும் அவ்வாறான இன்றியமையாத கைபேசிக்கு பயன்ப்படும் டவர் அமைப்பதற்காக தான் அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் 1 ம் பிரதிவாதி அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4. நான் எதன் அடிப்படையில் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நோய்கள் மக்களுக்கு ஏற்படும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் அனுமானத்தின் அடிப்படையில் தான் குறிப்பிட்டுள்ளேன். தற்போது டவர் அமைத்துவிட்டார்களா என்றால் அமைக்கவில்லை. இந்த வழக்கில் நான் உறுத்க்கட்டளை அதிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. நான் மவாட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் அடிப்படையில் நடவடிக்கை ஏதேனும் எடுத்தார்களா என்றாலும்

எனக்கு பதில் ஏதேனும் அனுப்பினர்கள் என்றால் எதுவும் அனுப்பவில்லை. 1ம் பிரதிவாதி ICMR என்ற மருத்துவ குழுவின் ஆய்வின் அடிப்படையில் பொது மக்களுக்கு எந்த சுகதார கேடும் ஏற்படாது என்றும் AM FM ஆகிய கதிர் வீச்சிகளை விட குறைவான கதிர் வீச்சிகள் தான் இருக்கிறது என்ற அடிப்படையிலும் மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படுத்தியும் மக்களுக்கு அறிவியல் பூர்வாமாக பாதிப்பு ஏதுமில்லை என்பதன் அடிப்படையிலும் 1ம் பிரதிவாதி டவர் அமைக்க அனுமதி கொடுத்தார் என்றால் சரியல்ல. முறையான சட்ட விதிகளுக்கு உட்பட்டுதான் 1ம் பிரதிவாதி டவர் அமைப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளார் என்றாலும் நான் எந்தவித அடிப்படை ஆதாரமும் இன்றி எனது சுயலாபத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொதுவாகவே பணம் பரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு 1ம் பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

<u>**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். சுனைபாறை ஊரிற்க்கு என்று நிர்வாக குழுவோ சட்ட விதிகளோ கிடையாது என்றால் சரிதான். சுனைபாறை ஊர் சிறிய ஊர் என்றால் சரிதான். எனது ஊரின் அருகே பல ஊர்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது சொத்து சம்மந்தமாக எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை உயர்நீதிமன்றத்தில் தான் ஆட்கொணர்வு மனுவாக தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் 3ம் பிரதிவாதியின் சொத்தை பொறுத்து பரிகாரம் கேரியுள்ளளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்தவித கட்டிடமும் கிடையாது என்றால் சரிதான். சுனைபாறை ஊரில் ஆங்காங்கே சில வீடுகள் அமைந்துள்ளது என்றால் சாட்சி பதில் அளிக்கமால் அமைதியாக உள்ளார்.

2. பல ஊர்களிலும் பல இடங்களில் கட்டிடங்கள் மேலும் கட்டிடங்கள் அருகேயும் மக்கள் அதிகளவில் வசிக்கும் இடங்களிலும் டவர் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் டவர் அமைப்பதற்கு 1ம் பிரதிவாதி அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சாட்சி பதில் அளிக்கமால் அமைதியாக உள்ளார். மேற்படி அனுமதியானது அனைத்து துறை அதிகாரிகலும் மேற்கொண்ட ஆய்விற்கு பின்போ அவர்களது ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அனுமதியின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி தனது பனியை தொடங்கி விட்டார் என்றால் சரிதான். சுனைபாறை ஊரில் அனைத்து சமுதாய மக்களும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

3. என்னை தவிர எனது ஊரில் டவர் அமைப்பது சம்மந்தமாக யாரும் எந்த வித ஆட்சியபணை தெரிவிக்கவில்லை என்றால் சாட்சி அமைதியாக உள்ளார். 2,3 பிரதிவாதிகள் ஏற்ப்படுத்திக் கொண்ட ஒப்பந்ததை நான் பார்த்னோ என்றால் பார்க்கவில்லை. பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதால் தான் 1ம் பிரதிவாதி அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சாட்சி அமைதியாக உள்ளார். நான் 2ம் பிரதிவாதிக்கு ஏதேனும் புகார் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி சங்கதியை நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் கைபேசி, தொலைகாட்சி போன்ற சாதனங்கள் பயன்படுத்தி வருகிறேன் என்றால் பயன்படுத்துகிறேன். டவர் அமைப்பது என்பது மக்களுக்கான அத்தியவசிய தேவை என்றால் சாட்சி அமைதியாக உள்ளார். எனது தனிப்பட்ட காரணங்களுக்காக வேண்டி பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை

தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

4. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில் உரையை நான் படித்து பார்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் 80 CPC அறிவிப்பு 1ம் பிரதிவாதிக்கு அனுப்பாத காரணத்தினால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 02.02.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.